மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு கிடைத்தவுடன் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று, இத்திட்டம் வரும் நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–05

திரு. ப. இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்ட மக்கள்மீது தனி அக்கறை கொண்டு, பல்வேறு நலத் திட்டங்களை ஆற்றிவரும் இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லரசிற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாக நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 222, திரு. என். நன்மாறன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

222—

தூர் வாரும் பணி

***42180—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, அனுப்பானடி கால்வாயைத் தூர் வாரி சுத்தம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய பணி தற்சமயம் ஆய்வில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை. திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரம் சிறப்பாகவும், தூய்மையாகவும், சுகாதார நிலையோடு

இருக்க வேண்டுமென்பதற்காக அந்த நகரத்தைப் பொறுத்த அளவிலே எல்லா ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டு, சாலைகள் எல்லாம் நல்ல விதத்திலே இருக்கின்ற இந்த நேரத்தில், இந்த அனுப்பானடி கால்வாயின் மூலம் சுற்றுப்புறச் சூழல் கெடுகின்ற நிலை, சுகாதாரக் கேடுகள் விளைகின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், இந்த ஆண்டு எப்படியாவது அரசு இதனைப் பரிசீலித்து, அந்தக் கால்வாயைத் தூர் வாருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுப்பானடி கால்வாய் வைகை ஆற்றின் வலது கரையில் இரயில்வே பாலத்திற்கு மேல்புறம் புட்டுத்தோப்பு அருகில் பிரிகிறது. இதன் மொத்த நீளம் 3,017 மீட்டர் ஆகும். இதன்மூலம் அனுப்பானடி பெரிய கண்மாய் மற்றும் சின்னக் கண்மாய் நீரைப் பெறுகிறது. இதற்கு நேரடிப் பாசனம் இல்லை. இதன்மூலம் பயன்பெறும் கண்மாய்களின் பாசனப் பரப்பு 880 ஏக்கர். அனுப்பானடி கால்வாய் பிரியும் இடத்தில் ஆற்றின் கரையின் மட்டம் மிகவும் பள்ளமாக உள்ளது. இதனால் இந்தக் கால்வாயில் கடந்த சில ஆண்டுகளாகத் தண்ணீர் செல்வதில்லை. நாளடைவில் இதன் பாசன நிலங்கள் குடியிருப்புகளாக மாறத் தொடங்கிவிட்டன. மேலும் இந்த வாய்க்கால் மதுரை மாநகராட்சிக்குள் செல்வதால், அப்பகுதிவாழ் மக்கள் தத்தம் வீட்டின் கழிவு நீரை வாய்க்காலுக்குள்விட்டும், குப்பையைக் கொட்டியும் தூர்ந்து போகச் செய்துவிட்டனர். இக்கால்வாய் தூர்ந்து போய்விட்டதால் தண்ணீர் செல்வதற்கு வாய்ப்பே இல்லாததால், அனுப்பானடி பெரிய கண்மாய், வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே இக்கால்வாயில் தூர் வாரும் பணிகளைத் தற்சமயம் மேற்கொள்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுற்றுப்புறச் சூழ்நிலையைக் கருதி, இந்தக் கால்வாயைத் தூர் வாருகின்ற பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே, அந்தக் கால்வாய் மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் விரைந்து செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. லா. சந்தானம்: அமைச்சருக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி வளர்மதி ஜெபராஜ், எதுவும் இதிலே கேட்கவில்லையா?

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இது மதுரை மாநகரிலுள்ள அத்தனை மக்களுக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி. அதுமட்டுமல்ல. தொடர்ச்சியாக எங்களுடைய மேற்குத் தொகுதியிலும், கோரிப்பாளையத்தையொட்டி சாக்கடை போய்க் கொண்டிருக்கிறது, அடைப்பு ஏற்படுகிறது. அதையும் சேர்த்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தூர் வாருவார்களா என்பதைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரையே தூர் வாரச் சொல்கிறீர்களா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய சாக்கடை நீர்ப்பாசனத் திட்டத்தில் இருக்கிறதா என்ற கேள்வியை நான் அவரிடம் திரும்பக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர், சொல்லுங்கள்.

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதிலே தண்ணீர் போய்க்கொண்டிருந்தது. இப்பொழுது மக்கள் சாக்கடையை அந்தக் கால்வாயிலே கொண்டுபோய் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதன்மூலமாக சுற்றுப்புறச் சூழல் கெட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் அவர்கள் சொன்னதைப்போல, சுற்றுப்புறச் சூழல் கெட்டுக்கொண்டு, பன்றிகள் எல்லாம் போய்க் கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளிடத்திலே கலந்தாலோசித்து, மதுரை மாநகரைத் தூய்மைப்படுத்துவதற்கு இந்தப் பணியையும் ஏற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 223, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு நிதி அமைச்சர்.